Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 50/2022

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | பேக்டரி வேலை |
| பெயர் | - | கோகிலா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சக்திவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | மாணிக்கா எஸ்டேட் | வயது | - | 39 |
| சாதி | - | | | | |

**<u>29.02.2024</u>**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**:

1. நான் மாணிக்கா எஸ்டேட்டில் வசித்து பேக்டரியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 03-04-2021 அன்று இரவு 10.30 மணியளவில் மாணிக்கா என்சியில் உள்ள என் வீட்டில் சாப்பிட்டு பூ கட்டிக்கொண்டிருந்தேன். அப்ப ஒரே சவுண்டு கெட்ட கெட்ட வார்த்தையாக சத்தம்போட்டு கத்திக்கொண்டு இருந்தார்கள். தேவிடியா முண்டைமகளே, கண்டாரோலி வாடி வெளியே வாஉன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று ஆஜர் எதிரிகளான நிஷாவும், ராஜம்மாளும் சொன்னார்கள்.

2. நாங்கள் வெளியே எழுந்துபோய் கதவை நீக்குவதற்குள் கதவை உடைத்துவிட்டார்கள். லைட்டைஎல்லாம் அடித்து உடைத்துவிட்டார்கள். அப்புறம் ஏன் இங்கு வந்து உடைத்து கத்திக்கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு தர்ஷன் என்ற பையன் பாத்ரூம் பக்கம் ஒளிந்துகொண்டிருந்தார். ஆஜர் எதிரிகளிடம் என்னவென்று கேட்டுக்கொண்டு இருக்கும்போதே உருட்டுக்கட்டையால் பின்மண்டையில் தர்ஷன் அடித்துவிட்டார். திரும்பி பார்க்கையில் முன் நெற்றியில் தர்ஷன் அடித்துவிட்டார்.

3. பின்மண்டையில் அடித்ததில் பின்மண்டையில் ரத்தமும், முன் நெற்றியில் ரத்தமும் வந்தது. தர்ஷன் என்னை உதைத்து கீழே தள்ளிவிட்டார். நான் கீழே விழுந்தவுடன் ஆஜர் முதலாவது எதிரி கல்லை எடுத்து எனது தொடையில் தூக்கி போட்டார் அதனால் எனது தொடையில் ரத்தக்கட்டு

ஏற்பட்டது. ராஜம்மாளும் கட்டையை வைத்து கீழே விழுந்த என்னை உடம்பு முழுவதும் அடித்துக்கொண்டே இருந்தார். அப்புறம் என் பிள்ளைகள் ஓடி வந்து தடுக்கவந்தார்கள். அக்கா பொண்ணு அனுசியாவையும் அடித்துவிட்டார்கள். என் பெண் தீபிகாவையும் அடித்துவிட்டார்கள்.

4. நான் கீழே விழுந்துஇருக்கும்போது நிஷா எனது கழுத்தில் இருந்த தாலிகொடியுடன் இருந்த 2 பவுன் சையினை அறுத்துவிட்டு போய்விட்டார். அதன்பிறகு தர்ஷன் வந்து என்னுடைய முடியை பிடித்து கல்லிலேயே முட்டினார். அந்த சமயத்தில் அவர் கஞ்சாவும் தண்ணியும் அடித்து இருந்தார். சத்தம் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர் முருகன், செல்வி, ஆகாஷ் வந்துவிட்டார்கள், அவர்கள்வந்தவுடன் ஆஜர் எதிரிகள் இருவரும் ஓடிவிட்டார்கள்.

5. அப்பொழுதும் தர்ஷன் அங்கேயே நின்று அடித்துக்கொண்டுதான் இருந்தார். அப்புறம் ஆகாஷ் 108-க்கு போன் பண்ணி ஆம்புலன்ஸ் வந்து வால்பாறை GH-க்கு அழைத்துப்போனார்கள் அங்கு போலீசார் விசாரணை செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னை அடிக்க பயன்படுத்திய கட்டையையும், கல்லையும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய கட்டை ராஜம்மாள் என்னை அடிக்க பயன்படுத்தியதுதான். ஆனால் கல் இதைவிட பெரியதாக இருந்தது. சுமார் 70 செ.மீ நீளம் சுமார் 12.15 செ.மீ விட்டமும் கொண்ட இருபுறமும் உடைந்த நிலையில் உள்ள மரக்கட்டை -ஒன்று -1, சாபொ.-1 ஆகும். தர்ஷன் வைத்திருந்த கட்டையை எடுத்துக்கொண்டே ஓடிவிட்டார்.

6. வால்பாறை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்துவிட்டார்கள். அங்கு வந்து போலீசார் விசாரித்தார்கள். அப்போதுதான் சையினை பறித்தது எல்லாவற்றையும் சொன்னேன். நகை பறிப்பை சேர்க்காமல் விட்டதால் எஸ்பி ஆபிஸ்ஸில் புகார் கொடுத்துள்ளேன். ஏற்கனே வால்பாறை போலீஸ் ஸ்டேசனில் ஆஜர் எதிரிகள் மீது மூன்று முறை கம்பிளைண்டு கொடுத்துள்ளேன். அதற்கு ஆஜர் எதிரிகளையும் அவருடைய கணவரையும் கூப்பிட்டு விசாரித்து மூன்று CSR Copy கொடுத்தார்கள் வார்ன் பண்ணி அனுப்பினார்கள். ஆஸ்பிட்டலில் இருந்து வந்தபிறகும் கேஸை வாபஸ் வாங்கசொல்லி வால்பாறையில் வைத்து இன்ன கெட்ட கெட்ட தேவிடியா கண்டாரோலி என்ற கெட்டவார்த்தையை சொல்லி வாபஸ் வாங்கச்சொல்லி கொலை மிரட்டல் விடுத்தார்கள். அப்பவே போய் கம்பிளைண்டு கொடுத்தேன்.

7. நிஷாவின் வீட்டுக்காரர் சுரேஷ்குமார் கேஸை வாபஸ் வாங்கச்சொல்லி செக்ஸ் டார்ச்சர் கொடுத்தார். அந்த ரெக்காடை ஸ்டேஸ்சனில் போட்டு காண்பித்தேன். இரவு நேரத்தில் கதவை எல்லாம் தட்டி கேஸை வாபஸ் வாங்கச்சொல்லி ரொம்ம தகராறு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**:

எதிரிகள் ஆஜர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 50/2022

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | ஆசிரியர் வேலை |
| பெயர் | - | அனுசியா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அறிவழகன் | சமயம் | - | |
| கிராமம் | - | ஸ்டேன்மோர் | வயது | - | 26 |
| சாதி | - | | | | |

**29.02.2024**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**:

1. நான் திருப்பூரில் தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 03-04-2021 அன்று இரவு 10.30 மணியளவில் மாணிக்கா என்சியில் நானும எனது சித்தி கோகிலாவும் மறுநாள் ஈஸ்டர் என்பதால் பூ கட்டிக்கொண்டிருந்தோம். அப்போது இரவு 10.30 மணி இருக்கும். அப்போது ஒரு பேடு வேர்டான தேவிடியா முண்ட என்று ஆஜர் எதிரி நிஷா சொன்னார். என் புருஷனை வைத்திருக்கியாடி என்று சொல்லி கதவை காலால் எட்டி உதைத்தார். லைட் வெளியில் எறிந்துகொண்டிருந்தது கட்டையால் அதை உடைச்சுவிட்டார்கள்.

2. கதவை உடைத்ததும் நாங்கள் என்ன சத்தம் என்று பார்த்தபோது அவங்க பையன் வர்ஷன் என்று நினைக்கிறேன். பாத்ரூம்மில் இருந்து கட்டையால் என் சித்தியின் மண்டையை உடைத்துவிட்டார். நிஷா சித்தியின் முடியை பிடித்து தரதரவென்று வெளியே இழுத்துசென்று காவாய் மாறி இருக்கும் துணி தொவைக்கும் கல் இருக்கும் இடத்தில் போட்டுவிட்டார்.

3. அவங்க பையன் காலில் எல்லாம் உதை உதையினு உதைத்துவிட்டு கட்டையை மறுபடியும் எடுத்து என் சித்தியை அடித்துக்கொண்டே இருந்தார். அந்த அக்காவான நிஷாவிடம் விட்டுறுக்கா என்று சொல்லி காலில் விழுந்து அழுதேன். அப்ப அவங்க மாமியார்என்று நினைக்கிறேன். என்னை கட்டையால் லெப்டு சைடு கையில் அடித்துவிட்டார். என்னை கட்டையால் அடித்தவர்தான் இந்த வழக்கில் ஆஜராகியுள்ள 2-வது எதிரி.

4. அப்புறம் நிஷா என் சித்தியின் முடியைப்பிடித்து விடாமல் அடித்துக்கொண்டே இருந்தார். அப்ப என் சித்தியால் எழுந்திருக்கமுடியாமல் லைட்டா மயக்கமானமாறி ஆகிவிட்டார். அப்ப அவங்க பையன் இருட்டுக்குள் என்ன ஆனது என்று தெரியவில்லை அதன் பிறகு பார்த்தபோது என் சித்தி போட்டுஇருந்த 2 பவுன் சையினை காணவில்லை. தேடிப்பார்த்தோம் காணவில்லை அந்த பையன் அடித்துக்கொண்டு இருந்தார் அவர்தான் எடுத்துக்கொண்டுபோய்விட்டார். பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்தவுடன் அடித்துவிட்டு போய்விட்டார்கள்.

5. ஸ்டேன்மோரில் உள்ள எங்க அப்பாவுக்கு போன் செய்து தம்பியை வரச்சொல்லி 108 மூலம் வால்பாறை GH க்கு சித்தி, சித்தியின் பொண்ணு தீபிகா, தம்பி அரவிந்த், அப்பா அறிவழகன் ஆகியோர் போனோம். அவங்க சித்தியை பொள்ளாச்சி GH க்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு தான் வந்து வால்பாறை போலீசார் விசாரித்தார்கள். ஒரு வாரம் அங்கு டிரீட்மெண்டு நடந்தது.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**:

எதிரிகள் ஆஜர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 50/2022

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | நர்சிங் படிப்பு |
| பெயர் | - | தீபிகா | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சக்திவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | மாணிக்கா எஸ்டேட் | வயது | - | 17 |
| சாதி | - | | | | |

**29.02.2024**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**சாட்சி தனது வயது 17 என்று சொல்லியுள்ளதால் கேள்விகளை புரிந்துகொண்டு அதற்கு ஏற்ற பதில்கள் சொல்லுகிறார்களா என்பதை அறிய கீழ்கண்ட நீதிமன்ற கேள்விகள் சாட்யிடம் கேட்கப்படுகிறது.**

கேள்வி எண்.- 1 : உம்முடைய பெயர் என்ன?

பதில் : தீபிகா

கேள்வி எண்.- 2 உம்முடைய தகப்பனார் பெயர் என்ன?

பதில் : சக்திவேல்

கேள்வி எண்.- 3 : உம்முடைய தாயார் பெயர் என்ன?

பதில் : கோகிலா

கேள்வி எண்.- 4 : உம்முடைய பிறந்த தேதி என்ன?

பதில் : 06-07-2006

கேள்வி எண்.- 5 : நீங்கள் எங்கு வந்து இருக்கீறீர்கள் என்று தெரியுமா?

பதில் : கோர்ட்டுக்கு

கேள்வி எண்.- 6: நான் யார் என்றால்?

பதில் : நீதிபதி

கேள்வி எண்.- 7: எதற்காக இப்போது வந்துள்ளேன் என்றால்?

பதில் : என் அம்மாவிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் நியாயம் கிடைக்க வந்துள்ளேன்.

சாட்சியிடம் மேற்கண்ட கேள்விகளை கேட்டு அவர் அளித்த பதில்களை நீதிமன்றம் கருத்தில் கொண்டு சாட்சி சாட்சியம் அளிக்க தகுதியானவர் என முடிவு செய்து அவரின் சாட்சியம் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**:

1. நான் கோயம்புத்துார் தனியார் கல்லுாரியில் நர்சிங் முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். கடந்த 03-04-2021 அன்று நைட் 10.30 க்கு நான், அம்மா கோகிலா, சிஸ்டர் அனுசியா மூவரும் மாணிக்க என்சியில் உள்ள வீட்டில் சாப்பிட்டு விட்டு பூ கட்டிக்கொண்டு உட்கார்ந்து இருந்தோம். அப்போது வெளியில் இருந்து சவுண்டு கேட்டது.

2. கெட்ட வார்த்தை பேசினார்கள். தேவிடியா முண்டை வெளியே வாடி முண்ட மகளே நீ என்ன என் புருஷனை வைத்துக்கொண்டு இருக்கியாடி முண்ட உனக்கு இதுதான் வேலையா என்று நிஷா பேசினார் அவர் நீதிமன்றத்தில் இருக்கிறார்,

3. சவுண்டு போட்டவுடன் நாங்கள் லைட் போட்டோம். இவங்க அதுக்கு முன்னாடியே போய் லைட்டை ஒடைச்சுட்டாங்க. டோர் ஓப்பண் பண்ணியவுடன் பாத்ரூமில் நிஷாவும் அவங்க பையனும் ஒளிஞ்சு இருந்தாங்க. அம்மா கதவை திறந்து வெளியே போனவுடன் கட்டையால் நிஷா என் அம்மாவின் தலையில் அடித்தார். அந்த கட்டை இந்த கட்டை இல்லை இதைவிட பெரியதாக இருந்தது. அம்மா மயக்கமாகி கீழே விழுந்துவிட்டாங்க அவங்க விழுந்தவுடன் அந்த பாட்டிகல்லை எடுத்து அடிச்சாங்க. அவர் இந்த கோர்ட்டில் உள்ளார். இந்த கல் இல்லை இதை விட பெரிய கல். அவங்க பையனும் கட்டையால் அடித்தார் இந்த கட்டை இல்லை அது வேற கட்டை.

4. நாங்கள் தடுக்கபோனபோது சிஸ்டருக்கும் அடி விழுந்தது. எனக்கும் அடி விழுந்தது. என்னையும் சிஸ்டரையும் அந்த பையன் தர்ஷன் தான் அடித்தான். நீங்க உயிரோடவே இருக்ககூடாது இந்த எஸ்டேட்லே இருக்ககூடாது என்று நிஷா சொல்லி என் அம்மாவின் முடியை பிடித்து பேக் சைடில் பாறை இருக்கு அதில் தலையில் முடியை இப்படி சுத்தி இடித்தார். அதில் எங்க அம்மாவுக்கு மண்டை எல்லாம் உடைந்துவிட்டது.

5. இவர்கள் அடித்ததில் அம்மாவுக்கு காலில், ஷோல்டரில், கையில் எல்லாம் வீங்கிவிட்டது. அப்புறம் நாங்க சவுண்டு போட்டோம். பக்கத்து வீட்டுக்காரங்க எல்லாம் வந்து இருந்தார்கள். முருகன், செல்வி, ஆகாஷ் வருவதற்குள் இவங்க எல்லாம் எங்க அம்மாவின் 2 பவுன் சையினை அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

6. இதற்கு முன்னாடியே இவர்கள் வால்பாறையில் வைத்து நீ ஏன் கேஸ்கேசா கொடுத்துட்டு இருக்க என்று சொல்லி கொலை மிரட்டல் பண்ணாங்க. நானும் அம்மாவும் எஸ்டேட் போகையில் எங்களைப் பார்த்தால் காரி துப்புவது, அன்னைக்கு உயிரோடு விட்டுடேன் இனிமேல் விடமாட்டேன் என்று மிரட்டினாங்க. அம்மாவை அடிச்சதுக்கு அப்புறம் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து மேலே வால்பாறையில் உள்ள GH-க்கு கொண்டுவந்துட்டாங்க.

7. அங்கு பர்ஸ்டு எய்டு பண்ணிவிட்டு பொள்ளாச்சி GH-க்கு அனுப்பிவைச்சாங்க. அப்புறம் அங்கு தான் டீரட்மெண்ட் பார்த்துக்கிட்டாங்க. அப்புறம் போலீஸ் வந்தாங்க கேட்டாங்க அப்புறம் அவங்ககிட்ட நாங்க சொன்னோம் எழுதுனாங்க அவங்ககிட்ட சையினை சொல்லியும் மென்சன் பண்ணவில்லை. அப்புறம் SP ஆபிஸில் சொல்லிவிட்டோம். SP ஆபிஸில் இருந்து வால்பாறை

போலீஸ் ஸ்டேசனுக்கு கால் பண்ணி பேசினார்கள். இவங்க மேலையும் ஹஸ்பண்டு மேலையும் ஏற்கனவே கம்பிளைண்டு கொடுத்து CCR காப்பி இருக்கு. அவங்க ஹஸ்பண்டு அம்மாகிட்டா தப்பா கெட்ட வார்த்தை பேசிய ஆடியோவெல்லாம் இருக்கு. அதற்கு அப்புறம் அம்மா குளிக்கையிலே பக்கத்தால வந்து தப்பா பேசினார். இவங்க சண்டை போடுவதற்கு முன்னேயே சிஸ்டர்கிட்ட எவ்வளவு உங்க சித்தி எவ்வளவு பவுன் நகை வச்சுருக்காங்க என்று கேட்டாங்க. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரிகள் ஆஜர் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.